2019 ஜுலை 4]

புதுப்பட்டினத்திலே ஒரு பகுதிநேர கடையையோ அல்லது முழுநேரக் கடையையோ திறப்பதிலே ஆட்சேபணை கிடையாது. புதுப்பட்டினத்திலே கடை இருக்கிறது. 500 கார்டுகள் இருந்தால்தான் நிரந்தரக் கடையாக ஆக்க முடியும். 500 கார்டுகள் இல்லையென்று சொன்னால், அது பகுதிநேரக் கடையாகி விடும். அதனால், அதைப் பகுதிநேரக் கடையாக வைக்க வேண்டுமா அல்லது முழுநேரக் கடையாக ஆக்க வேண்டுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலந்தாலோசித்து ஒரு முடிவை தெரிவிக்குமாறு தெரிவித்தேன். இருந்தபோதிலும், ஆய்விற்குப் பிறகு நிச்சயமாக ஒரு கடை அமைத்துத் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பகுதிநேர அங்காடியாக இருப்பதா அல்லது முழுநேர அங்காடியாக இருப்பதா என்பது. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன், உங்களுடைய வாய்ப்பு முடிந்துவிட்டது. (சிரிப்பு)*

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

ஆரம்ப சுகாதார நிலையம்

***37732—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுமாவிலங்கை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2019 ஜூலை 4

முற்பகல் 11-10

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், புதுமாவிலங்கை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெங்கு காய்ச்சல் ஆரம்பித்ததே என்னுடைய திருவள்ளூர் தொகுதியிலேதான். நோய்வாய்ப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கக்கூடிய கிராமங்கள் நிறைந்த பகுதி. கடம்பத்தூர் ஒன்றியம் கிட்டத்தட்ட 1,30,000 பேருக்கு மேல் மக்கள் வசிக்கக்கூடிய பெரிய ஒன்றியம். அந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே மருத்துவமனைகள் அருகில் இருந்தாலும், ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல புதுமாவிலங்கையிலிருந்து கடம்பத்தூருக்குப் போவதாக இருந்தாலும் சரி, பேரம்பாக்கம் போவதாக இருந்தாலும் சரி, போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால்தான் அந்தப் பகுதியிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்கிறேன். அந்த ஆரம்ப சுகாதார நிலையம் அங்கு வந்தது என்று சொன்னால், மக்கள் பயனடையக்கூடிய வகையில் அது இருக்கும். அதேநிலைதான் பேரம்பாக்கத்திலும். ஏனென்றால்* Town-*லிருந்து போகக்கூடிய 108* Ambulance *எல்லாம்* Railway Gate-*ல் நிறைய நேரம் காத்து நிற்கவேண்டிய சூழ்நிலை வருகிறது. ஏனென்றால், மேம்பாலம் கட்டி முடிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில், பேரம்பாக்கம் ஒன்றியத்திற்கு ஒரு 108* Ambulance-*ஐ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், அதே ஒன்றியத்தில் உள்ள உளுந்தையில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதிலே* Doctors, Nurses *சரியாக வருவதில்லை என்பதைத்தான் கிராம சபைக் கூட்டத்தில் அங்கே இருக்கக்கூடிய மக்களே ஒரு புகாராகத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல வெங்கத்தூர் ஊராட்சி, 20,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பெரிய ஊராட்சி. 5, 6 ஆண்டுகளுக்கு முன் கட்டி முடிக்கப்பட்ட கட்டடம். இன்னும்*

2019 ஜூலை 4]

Doctors, Nurses-*க்கான பணியிடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. அதையும் நீங்கள் பரிசீலித்து, அந்தப் பகுதி மக்கள் பயனடையும் வகையிலே நீங்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டும், அதைச் செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேச்சை ஆரம்பித்தவுடன் டெங்குவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். டெங்கு பரவாமல் உடனடியாக அந்தப் பிரச்சினையை முடித்து வைத்ததும் திருவள்ளூர் மாவட்டத்தில்தான். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வேகமாக நடவடிக்கை எடுத்து, உடனடியாக முடித்து வைத்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நன்கறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட இந்தப் பகுதிக்கு 108* Ambulance *வாகனத்தைக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை ஆய்ந்து எடுக்கப்படும். நீங்கள் கேட்டுக்கொண்டபடி, வெங்கத்தூர் ஊராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடம், உடனடியாக பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்தில் 12 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி திறந்திருக்கின்றது. ஒட்டுமொத்தமாக இந்த எட்டு ஆண்டுகளில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்கியிருக்கின்றோம். இந்தியாவிலேயே ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிகமாக இருந்து,* Rural Health-*அதாவது கிராமப்புற சேவையை உறுதிப்படுத்தியிருக்கக்கூடிய முதன்மை மாநிலம் இந்தியாவிலேயே நமது தமிழ்நாடுதான். அந்த வகையிலே, தாங்கள் குறிப்பிடுகின்ற புதுமாவிலங்கை பகுதிக்கு ஒருபுறம் கடம்பத்தூர், இன்னொருபுறம் பேரம்பாக்கம் இருக்கிறது. வருங்காலத்தில் அங்கே இருக்கக்கூடிய பொதுமக்களின் எண்ணிக்கைக்கேற்ப உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

[2019 ஜூலை 4

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது நான் விடுத்த கோரிக்கையை ஏற்று, திருவாலங்காடு பகுதியிலே ஓர்ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதற்குண்டான பணிகள் அங்கு தொடங்கப்படும் நிலையிலே, அதாவது அந்த நில உரிமை BDO Office பெயரில் ஏற்கெனவே இருக்கிறது. அதை மருத்துவமனைக்காக மாற்ற வேண்டிய ஒரு சூழ்நிலையில், Revenue Department-ல் அது கிடப்பில் இருக்கிறது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் தலையிட்டு, அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதே திருவாலங்காடு பகுதியில் கனகம்மா சத்திரத்தில் 6 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அது Highway-ஐ ஒட்டி இருக்கிறது. பூண்டி ஒன்றியம், பட்டறைபெரும்புதூரில் இருப்பதும் Highway-ஐ ஒட்டி இருக்கிறது. அவையெல்லாம் நிறைய விபத்துகள் ஏற்படக்கூடிய பகுதிகள். ஏனென்றால் அது Highway, திருப்பதிக்குப் போகிற ரோடு. நீங்கள் எல்லாம் திருப்பதிக்குச் சென்றாலும் அந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். அது நிறைய Accident நடக்கக்கூடிய பகுதி. அதனால் அங்கே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாலை வேளை Doctors-ஐ நியமித்தால் பிரசவ வலியால் வரும் பெண்களுக்கு அது உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தொவித்துக்கொள்கிறேன். திருவாலங்காடு பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை நீங்கள்தான் Upgrade செய்து கொடுத்தீர்கள். டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டபோது நீங்கள் விரைவாகச் செயல்பட்டீர்கள். அதற்கு இந்த நேரத்தில் நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், நாங்களும் அதில் இணைந்து செயல்பட்டோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவை எல்லாம் சரி. ஆனால், 'அதிகமாக Accidents நடக்கின்ற பகுதி வழியாக நீங்கள் திருப்பதிக்குச் செல்ல

2019 ஜூலை 4]

வேண்டும்' என அழைப்பதுதான் ஏன் என்று தெரியவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக 'அந்தப் பகுதியில் அதிகமாக விபத்து நடக்கும், அந்த வழியாகத்தான் நீங்கள் திருப்பதி போகவேண்டும், அதனால் நீங்களும் அந்த வழியாக வாருங்கள்' என்று சொல்வதில் உள்ள உள்நோக்கம் என்ன என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் தெரியும், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறையில் கட்டடங்கள் கட்டும் பணிகளும், மருத்துவப் பணியாளர்களை நியமனம் செய்யும் பணிகளும் தொடர்ந்து மிக அதிக அளவில் நடந்துகொண்டிருக்கின்றன. நாளைக்குக்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோர் 584 மருத்துவர்களை நியமனம் செய்து கொடுக்கவிருக்கிறார்கள். D.P.H. *பொது சுகாதாரத் துறையில் 100 சதவிகிதம்* Vacancy-*யே இல்லாத அளவிற்கு,* Vacancy-nil *என்கிற நிலையை நாளைக்கு உருவாக்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கோரிக்கையையும் அரசு கனிவோடு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி நரிக்குடி ஒன்றியப் பகுதி. அங்கேயிருக்கக்கூடிய ஒரு முக்கியமான கிராமம் இலுப்பையூர் என்ற கிராமம். அந்தக் கிராமம், அப்பகுதியிலுள்ள 10, 20 கிராமங்களுக்கு ஒரு தலையாய கிராமமாக இருக்கிறது. அந்தக் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்பது, அப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. சுற்று வட்டார கிராமங்களிலிருந்து மருத்துவ சிகிச்சைக்குச் செல்ல வேண்டுமென்றால், திருச்சுழிக்கோ அல்லது கமுதிக்கோ நீண்ட தூரம் பயணம் செய்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. தவிர, அந்தக் கிராமம் புன்னாற்றின்*

குறுக்கே, இருக்கின்ற காரணத்தால், வெள்ளக் காலங்களில் மக்கள் அந்த ஆற்றைத் தாண்டி வரமுடியாத நிலையிருக்கிறது. எனவே, இலுப்பையூர் கிராமத்தில் இருக்கக்கூடிய பொதுமக்களின் பொது சுகாதார வசதிகளை மேம்படுத்தக்கூடிய அவசியத்தை உணர்ந்து, அரசு அங்கே உடனடியாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையிலே, ஆவியூரிலே இருக்கக்கூடிய துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதாக உறுதியளித்திருந்தார். அதையும் கனிவோடு பரிசீலித்து, அதற்கும் ஆவன செய்வாரா என்பதை நான் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமப்புறங்களில் சுகாதாரச் சேவையை உறுதிப்படுத்த, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டுமல்ல, Not only P.H.Cs; அதோடு சேர்த்து 8,713 Health Sub Centres, துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு ஆண்டுகளில், இந்தியாவிலேயே ஒரு புதிய முயற்சியாக Health Sub Centres செயல்படுத்தப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது ஒரு கிராமத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கும் அந்தக் கோரிக்கையையும் அரசு கனிவோடு பரிசீலிக்கும். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. குக்கிராமங்களில் ஏற்கெனவே, ஒரு VHN, கிராம சுகாதார செவிலியர் இருக்கிறார்கள். அதிலே இன்னொரு VHN, Double VHN system, அதாவது, Health and Wellness Centres என்று சொல்லக்கூடிய 'அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் 985 Centres-ஐ நாம் தற்போது Upgrade செய்திருக்கிறோம். அங்கே மருத்துவர் இல்லாமல் இருந்தால்கூட, Well Trained VHN-ஐ வைத்து, 12 சுகாதார சேவைகளை அரசு உறுதிப்படுத்தியிருக்கிறது. அதாவது, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சென்றுதான் அவர்கள் சிகிச்சை பெறவேண்டும் என்ற நிலையை மாற்றி, அந்தந்தக் குக்கிராமங்களிலேயே தற்போது மருத்துவ சேவையை

2019 ஜூலை 4]

அரசு விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. இதனை அவையினுடைய தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இரண்டு கோரிக்கைளையும் அரசின் நிதிநிலைக்கேற்ப கனிவோடு அரசு பரிசீலிக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை வாழ வைத்த தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்ட சானடோரியம் பகுதியிலே புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில், போக்குவரத்துத் துறையிலே பணிபுரிகிற, ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுடைய குழந்தைகளும் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பயிலவேண்டும் என்கிற அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் பெருந்துறையில் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கினார்கள். போக்குவரத்துத் துறையில் கடும் நிதிப் பற்றாக்குறை காரணமாக தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்துத் துறையின்கீழ் இருக்கிற மருத்துவக் கல்லூரியை சுகாதாரத் துறை ஏற்று நடத்தும் என்ற ஒரு சிறப்பான அறிவிப்பை வெளியிட்டார்கள். அதனுடைய பணிகளெல்லாம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் விரைவில் முடிவுபெற்று, சுகாதாரத் துறை இக்கல்லூரியை ஏற்று நடத்துவதற்கான, அறிவிப்பு உடனடியாக வெளியிடப்படுமா என்றும், அதற்குண்டான கட்டமைப்புப் பணிகளை விரைவாக பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்குக் கொண்டு வருமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்,

[*2019 ஜுலை 4*

திரு. தோப்பு வெங்கடாச்சலம் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அக்கல்லூரியை Director of Medical Education-*கீழ்-மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அக்கல்லூரியின்* seats-*ன் எண்ணிக்கையையும்,* Increased Intake *என்கிற அடிப்படையில், 100 ஆக உயர்த்தி,* Intake-*ஐயும்* Increase *செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கின்ற அனைத்து வசதிகளும் பெருந்துறை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.*

முற்பகல் 11-20

திரு. கோ. லோகநாதன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களை வாழ வைத்த தெய்வம், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். இன்றைக்கு அம்மா அவர்களுடைய கனவுகளையும், அம்மா அவர்களுடைய இலட்சியங்களையும், அம்மாவினுடைய திட்டங்களையும் தமிழகத்தில் சிறப்பான முறையில் நல்ல முறையில் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய தொகுதியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கீழ்வைத்தினான்குப்பம், சட்டமன்றத் தொகுதி 2011-ல் உருவாக்கப்பட்ட பெரிய தொகுதி. முழுக்க முழுக்க கிராம ஊராட்சிகளையே உள்ளடக்கிய தொகுதி. இந்தத் தொகுதியில் கே.வி. குப்பம் ஒன்றியம், கே.வி. குப்பம் ஊராட்சியில் ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை, தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தரவேண்டும் என்பது அந்த மக்களுடைய நீண்ட

2019 ஜூலை 4]

நாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

சுற்றுலாத் தகவல் மையம்

***48483—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலையில் சுற்றுலாத் தகவல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலையில் சுற்றுலாத் துறைமூலம் தகவல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்கின்ற வினாவினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினவியிருக்கின்றார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் சுற்றுலா அலுவலகமும், கோயம்புத்தூர் சர்வதேச விமான நிலையம் மற்றும் இரயில் நிலையம் ஆகியவற்றில் சுற்றுலாத் தகவல் மையங்களும் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. எனவே,